


கோவை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஆர்.எஸ்.புரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4ஆம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில், ஆர்.எஸ்.புரம் பகுதிச் செயலாளர் கார்த்திக் கே.செல்வராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் கழக விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர்.ராமச்சந்திரன், கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச்செல்வன், எஸ்.ஜெயந்தி, அசோக் பாபு, அப்துல் ரகுமான், சோமு (எ) சந்தோஷ், டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்ரமணியன், கதிர்வேல், ஜெய்லாபுதீன் கரும்புகடை, கேபிள் மணி செல்வபுரம், சாமிபையன், அ.அறிவரசு, ஜெகதீசன், பழக்கடை ஆறுமுகம், சி.டி.டி.பாபு, துரை பரமசிவம், சி.ஆர்.ரவிச்சந்திரன், தியாகு, சிவா, பத்ரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான "செம்மொழி நாளை" முன்னிட்டு கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு ஒருங்கிணைந்த மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, முன்னாள் அரசு வழக்கறிஞர் பொள்ளாச்சி ஜி.அதிபதி, மாவட்ட அமைப்பாளர்கள் எஸ்.அன்புச் செழியன், பத்ரி(எ) பழனிச்சாமி, டி.மருதராஜ், தலைவர் மூ.மருதுபாண்டியன், துணைத்தலைவர் மணிவேல், துணை அமைப்பாளர்கள் எம்.சரவணன், சலாவுதீன், என்.ஆர்.விக்ரம், ஆசைத்தம்பி, எலிசபெத்ராணி ஆகியோர் முன்னிலையில் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புக்களை வழங்கினார். இதில் வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில்

# 30% வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைத்து இப்பொழுதே உறுதி செய்வதுதான் நம் இலக்கு!

## மாநகர் மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, ஜூன் 11 –

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்கா நல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற மாநகர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் 30% வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைத்து இப்பொழுதே உறுதி செய்வது தான் நம் இலக்காக நிர்ணயிக்க தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.



கோவை மாநகர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் 09.06.2025 திங்கட்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் வடகோவை, மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், தொ.மு.ச உமா காந்தன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்பிரமணியம், ஆனந்த குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந. உதயகுமார், மு.மா.ச.முருகன், இரா.மணிகண்டன், சங்கனூர் ஆனந்தகுமார், ச.குப்புசாமி, பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.சிவா, ஷேக் அப்துல்லா, துரை செந்தமிழ்ச் செல்வன், மா.நாகராஜ், இரா.சேரலாதன், ஆர்.எம்.சேதுராமன், மார்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், வ.ம.சண்முகசுந்தரம், கோவை லோகு, அஞ்சுகம் பழனியப்பன், எ.எம்.கிருஷ்ணராஜ், கே.எம்.ரவி, பரணி கே.பாக்கியராஜ், மாநகர் மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி இரா.தனபால், தகவல் தொழில்நுட்ப அணி ஆர்.கே.சுரேஷ்குமார், வழக்கறிஞர் அணி எஸ்.அன்புச் செழியன், பொறியாளர் அணி நா.பாபு, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அணி இலா.தேவசீலன், ஆதிதிராவிடர் நலக்குழு அணி பி.சிவராஜ், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி ஏ.எஸ்.ஜெயக்குமார், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அ.அபு (எ) அபுதாஹீர், அயலக அணி தி.கண்ணன், நெசவாளர் அணி வி.மணி, விளையாட்டு மேம்பாட்டு அணி எம்.எம்.சஞ்சய் குமார், தொண்டர் அணி கராத்தே அர்ஜுனன், சுற்றுச் சூழல் அணி ஸ்ரீ சத்யா கோவை தங்கம், மகளிர் அணி வி.அன்னம்மாள், மகளிர் தொண்டரணி சி.ஆர்.கனிமொழி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம் தேவ், கோவை அருண், க.மணிகண்டன், இப்னு மசூது உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

07.06.2025 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' – உறுப்பினர் சேர்க்கை குறித்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மதுரையில் நடைபெற்ற மிகச்சிறப்பான பொதுக் குழுவில் "மண் மொழி மானம் காத்திட கழக உறுப்பினர் சேர்க்கையை 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பின்கீழ் ஒருங்கிணைக்கத் திட்ட மிட்டிருக்கிறோம். 75 ஆண்டுகள் கடந்த பிறகும் அதே இளமையோடு கழகம் செயல்பட்டு வருகிறதென்றால் அதற்கு காரணம் கழகத்தின் கட்டமைப்பை தொடர்ந்து வலிமைப்படுத்திக் கொண்டே வருகிறோம். அப்படிப்பட்ட வலிமைக்கு புதிய உறுப்பினர் சேர்க்கை மிகமிக முக்கியமானது.

"ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை குறித்து கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலில், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 விழுக்காடு வாக்காளர்களை நாம் உறுப்பினர்களாக இணைக்க வேண்டும். அதாவது ஒரு வாக்குச்சாவடியில் 1000 வாக்காளர்கள் இருந்தால் அவர்களில் 300 பேர் கழகத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

நமக்கு வாக்களிக்கத் தயாராக இருப்பவர்கள் தான் நம்மிடம் உறுப்பினர்களாக இணைவார்கள். 30% வாக்காளர்களை உறுப்பினர்களாக இணைத்து இப்பொழுதே உறுதி செய்வதுதான் நம் இலக்கு. எனவே, இப்பணியை சுறுசுறுப்புடன், அக்கறையுடன் செய்ய வேண்டும். உறுப்பினர் சேர்க்கைக்குச் செல்லும் பூத் கமிட்டியினர் ஒவ்வொரு வீட்டிலும் 10 நிமிடங்களாவது செலவிட வேண்டும். அவர்களுடன் அப்பகுதியைச் சார்ந்த நிர்வாகிகள், சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 300 400 வீடுகள் தான் இருக்கும். 40 நாட்கள் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கை முகாமில் ஒரு நாளில் 10 15 வீடுகள் என்று பார்த்தாலும் கூட போதும். நாம் செல்லாத வீடே இல்லை என்ற நிலையை உருவாக்கி விடலாம். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 'பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்' நியமிக்கப்பட்டுள்ளனர். உறுப்பினர் சேர்க்கை படிவத்தில் உள்ள விவரங்களை இவர் செயலியில் கட்டாயம் உள்ளீடு செய்திட வேண்டும். ஒவ்வொரு வாக்குச் சாவடி வாரியாக எத்தனை பேர் உறுப்பினர்கள் ஆகியுள்ளனர் என்கிற டேட்டா தினசரி எடுப்போம்.

2 கோடி உறுப்பினர்களை நமக்கான வாக்காளர்களாக ஜூலைக்குள் உறுதி செய்து விட்டால், 2026ல் நம்ம வெற்றிய யாராலயும் தடுக்கவே முடியாது. உறுப்பினர் சேர்க்கையின் போது, மக்களிடம் பொறுமையாக காது கொடுத்து கேட்க வேண்டும். நம் சாதனைகளை விளக்குவோம்.

எப்படிப்பட்ட சூழலில் இச்சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்று தெரியப்படுத்துவோம். உருவாக்கப்படும் நெருக்கடிகளையெல்லாம் மீறி சாதனைகளைச் செய்திருப்பதை எடுத்துச் சொல்வோம். இது உறுப்பினர் சேர்க்கை மட்டும் கிடையாது, இது ஒரு முழுமையான தேர்தல் பரப்புரை! இதுதான் களத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தோட தேர்தல் பரப்புரையின் தொடக்கம்.

இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் பங்கேற்று, திரும்பவும் பெரும் பலத்துடன் கழக ஆட்சி அமைய, அயராது செயல்படுவோம் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட நாயகன், திராவிடச் சூரியன், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வருகின்ற 11.06.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் சென்னையிலிருந்து கோவை விமான நிலையத்திற்கு வருகை தர உள்ளார். அவருக்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அவர்களின் தலைமையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவருக்கு மாபெரும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதுசமயம், இவ்வரவேற்பு நிகழ்ச்சிக்கு காலை 9.30 மணியளவில் கோவை விமான நிலையத்தில் கோவை மாநகர் மாவட்டக்கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA2 (பாக முகவர்கள்), BLC பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு அளிப்பது என இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



செம்மொழி காவலர், முத்தமிழறிஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம், வீரப்பன்சத்திரம் பகுதிச் செயலாளர் வி.சி.நடராஜன் ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் மல்லிகா நடராஜன், வி.எஸ்.குமார், அம்ஜத் பாட்சா, கல்யாணி, ஜீவானந்தம், கே.சுப்பிரமணியம், ஜெ.தங்கமணி, ஆதம்ஸ் இளங்கோ, மகளிரணி தமிழ்செல்வி, செந்தாமரை, பிரபு, மகளிரணி, நர்மதா, தனலட்சுமி, பரிமளா ராஜீ, கலைவாணி, தங்கவேல், கோபிநாத், ரவிக்குமார், குணசேகரன் வேல்முருகன், நந்தினி, மன்சூர், தினேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!

*கரூர், ஜூன் 11 -*

*கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் இன்று (11.06.2025 - புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணிச் செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்க, அரவக் குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.*



*அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

**பொருள் :**

*1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் வழிகாட்டு தலின்படி 'ஓரணியில் தமிழ்நாடு' - உறுப்பினர் சேர்க்கை குறித்து.*

*2. கழக வளர்ச்சி பணிகள்.*

*இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிங்கார இரத்தினசபாபதி

**ஜூன் 11 (2020)**



**தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.**

**கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்தோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**